

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று அறிவித்ததை தொடர்ந்து உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன் இடம் தேர்வு செய்வது குறித்து கும்பகோணம் அரசினர் ஆண்கள் கலைக்கல்லூரி வளாக விக்டோரியா ஆடவர் விடுதியினை பார்வையிட்டார்கள், உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.பிரியங்கா பங்கஜம், தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மு.நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன், மாவட்ட வருவாய் அலுவலர் ரெ.தியாகராஜன் ஆகியோர் உள்ளனர்.




திருச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மே தினம் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், மண்டல தொ.மு.ச. பொதுச் செயலாளர் ஜோசப்நெல்சன் முன்னிலையில் திருச்சி சுப்பிரமணியபுரம் கலைஞர் சிலை அருகில் அமைக்கப்பட்டிருந்த மே 1 தின நினைவு சின்னத்தில் மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினர். நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேகரன், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர்கள் செங்குட்டுவன், மூக்கன் லீலாவேலு, மாநகரக் கழக நிர்வாகிகள் சந்திரமோகன், பொன்செல்லையா பகுதி கழகச் செயலாளர் மணிவேல் மற்றும் மாவட்ட மாநகர நகர ஒன்றிய பேரூர் பகுதி கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .



மே 1 உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு ஈரோடு மத்திய மாவட்ட கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் தொ.மு.ச. கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். நிகழ்வில் கொண்டசாமி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் பெரியசாமி, பால் சின்னசாமி, சுப்பிரமணியம், ராஜா, பெருந்துறை, பேரூர் செயலாளர்கள் ஓ.சி.வி. ராஜேந்திரன், அகரம் பி.எஸ்.திருமூர்த்தி, ஜி.கே.செல்வன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,தொ.மு.ச. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### திருத்தணி நகராட்சியில்

# ரூ.3.02 கோடியில் பெருந்தலைவர் காமராஜர் காய்கறி நாளங்காடி கட்டடம்!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

திருவள்ளூர், மே 3 -

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகராட்சி பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (2023 24) திட்டத்தின் கீழ் ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜர் காய்கறி நளங்காடி கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப் தலைமை தங்கினார், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் முன்னிலை வகித்தார் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, வரவேற்பு உரையாற்றினார்

இதில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என்.நேரு சிறுபான்மையினர் மலர் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு காய்கறி நளங்காடி கட்டிடத்தினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பார்வையிட்டார்கள்

பின்னர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் தெரிவிக்கையில், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சி பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (202324) திட்டத்தின் கீழ் ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் 97 கடைகள் கொண்டுள்ள பெருந்தலைவர் காமராஜர் காய்கறி நளங்காடி கட்டடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் நகராட்சி துறையின் கீழ் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று உத்தரவுக்கிணங்க நகராட்சி நிர்வாகத்தின் சார்பாக 35 மாநகராட்சிகள் , 160 மேற்பட்ட நகராட்சிகள், 400 க்கும் மேற்பட்ட பேரூராட்சிகள் உருவாக்கப்பட்டு பொதுமக்களுக்கு தேவையான காய்கறி அங்காடி, பேருந்து நிலையம், குடிநீர் வசதி கழிப்பறை, சாலை வசதி, கழிவுநீர் வடிகால் போன்ற பணிகள் ஒவ்வொரு நகராட்சி பகுதிகளிலும் நடைபெற்று வருகிறது. மேலும், சாலை பணிகளைப் பொறுத்தவரை 3780 பணிகளும், தற்பொழுது 5 இலட்சம் எல் இ டி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. மீண்டும் 125000 எல் இ டி விளக்குகள் பொருத்துவதற்கு பணிகள் நடைபெற்று வருகிறது. அதுமட்டுமில்லாமல் ஒவ்வொரு நகராட்சி பகுதிகளிலும் கழிவுநீர் வடிகால் அமைக்கும் பணிகளும், மேலும் , நகராட்சி பகுதியில் உள்ள பள்ளிக்கூடங்கள் தரம் உயர்த்தப்பட்டும், அங்கன்வாடி மையங்கள் புதுப்பிக்கப்பட்டும் உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் மேயராகவும் இருந்திருப்பதால் நகராட்சி நிர்வாகத்தின் கீழ் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் நிவர்த்தி செய்யும் வகையில் நிதிகளை ஒதுக்கீடு செய்து தருகிறார்கள் இந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்கள் கோரிக்கைகள் அனைத்தும் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்டு வருவதால் அவரே. இக்கோரிக்கையினை. முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு கொண்டு சென்று தேவையான நிதியினை பெற்று கோரிக்கைகளை பூர்த்தி செய்து கொடுப்பார்கள். பொதுமக்களின் தேவைகளை அறிந்து செயல்படும் முதலமைச்சர் இந்தியாவிலேயே முதலமைச்சர் அவர்கள் தான் என நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்தர்.

பின்னர் 25 தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய அட்டையினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அவர்கள் வழங்கினார்கள்.

தொடர்ந்து, திருத்தணி நகராட்சி பகுதியில் ரூ.15.67 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலைய கட்டட பணிகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அவர்கள் பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்வில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் ஆவடி மாநகராட்சி மேயர் கந்தசாமி, நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர் லெட்சுமி, தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் தீபா, திருத்தணி நகராட்சி ஆணையர் பால சுப்பிர மணியம், பொறியாளர் ராஜாவிஜயகாமராஜ், பொதுப்பணி மேற்பார்வையாளர் நாகராஜன், நகராட்சி துணைத் தலைவர் சாமிராஜ், திருத்தணி நகரக் கழகச் செயலாளர் வி. வினோத்குமார், மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் நகர்மன்ற தலைவர் சரஸ்வதி பூபதி அனைவருக்கும் நன்றி கூறினார்.

### கள்ளக்குறிச்சி மாவட்டம் – ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி

# இளைஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் பேச்சு!

திருக்கோவிலூர், மே 3 -

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி திருக்கோவிலூர் வடக்கு, தெற்கு, மேற்கு, ஒன்றிய கழக இளைஞரணி சார்பாக வாக்குச்சாவடி இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் சந்தைப் பேட்டை ஆண்டவர் மஹாலில் நடைபெற்றது.



திருக்கோவிலூர் வடக்கு, தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் பா.விஜயராமன், வினோத் ஏகாம்பரம் ஆகியோரின் வரவேற்புரையில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர், கழகக் கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி முன்னிலையில், திருக்கோவிலூர் வடக்கு தெற்கு மேற்கு ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ். அய்யனார் மொ.இராஜேந்திரன் வ.கிருஷ்ணமூர்த்தி, தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அ.உதயா ஆகியோர்களின் வாழ்த்துரையில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேசுகையில் கழகத்தின் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் உள்ளிட்ட அனைவரும் வருகிற 2026 ஆம் ஆண்டு நடைபெற இருக்கின்ற சட்டமன்ற தேர்தலில் உங்களுடைய பணி மிகச் சிறப்பான முறையில் இருக்க வேண்டும்,

ஆகவே இன்று முதல் இருந்தே தேர்தல் பணியை உங்களுடைய பகுதிகளில் ஆரம்பித்து விட வேண்டும், மேலும் நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை துண்டு பிரசுர மூலம் பொதுமக்களிடத்தில் வீடு வீடாகச் சென்று திண்ணைப் பிரச்சாரம் மூலம் மேற்கொள்ள வேண்டும், அப்படி நீங்கள் திண்ணை பிரச்சாரத்தின் மூலம் நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களிடத்தில் கொண்டு போய் சேர்த்தாலே மீண்டும் தொடர்ந்து இரண்டாவது முறையாக கழக ஆட்சி அமையும், நமது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்றார், மேலும் நமது திராவிட மாடல் அரசின் பல்வேறு முத்தான திட்டங்களால் மக்கள் நமக்கு வாக்களிக்க தயாராக உள்ளனர், ஆகவே கழக நிர்வாகிகள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து நிலை வாக்குச்சாவடி முகவர்கள் உள்ளிட்ட அனைவரும் தேர்தல் பணிகளை சுறுசுறுப்புடன் செய்திட வேண்டும் என்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்,

இதில் தொகுதி பொறுப்பாளர் ச.அ.பெருநற் கிள்ளி பேசுகையில் இந்தியாவிலே மிக சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது, நமது திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் அவர்கள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் ஆட்சி புரியும் முதல்வர்களில் நம்பர் ஒன் முதல்வராக திகழ்ந்து வருகிறார், 24 மணி நேரமும் மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை உருவாக்கி வருகிறார், அப்படி இந்தியாவே ஊற்று பார்க்கும் நமது கழகத் தலைவர் அவர்களை இரண்டாவது முறையாக முதல்வராக பொறுப் பேற்க நாம் அனைவரும் ஒன்று கூடி தேர்தல் பணிகளை செவ்வன செய்திட வேண்டும் என்றும், தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் இதுதான் நமது ஒரே இலக்கு என்ற கழகத் தலைவரின் கொள்கைகளை நாம் அனைவரும் பின்பற்று வோம் என்றார்.

இந்தக் கூட்டத்தில் திருக்கோவிலூர் வடக்கு தெற்கு மேற்கு ஒன்றிய கழக துணை அமைப்பாளர்கள் சே.மோகன், மு. ராஜா, அ.ஞானவேல், வே. தயாளன், சு.முருகன், மு.சுமன்ராஜ், ச.பெர்னாட்ஷா, த.ஜெயபிரகாஷ், வெ.வசந்த், கு.ராமராஜ், ப.முருகதாஸ், அ.பாண்டியன் எம்.ஆர்.கே.குமரேசன், ப.சங்கர், சே.சிவராஜ், சு.சுரேஷ், பா.பிரபு, வீ.முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முடிவில் திருக்கோவிலூர் மேற்கு ஒன்றிய கழக இளைஞரணி அமைப்பாளர் க.ஜெயபிரகாஷ் நன்றி கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், விஜயபுரம் ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.41.20 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 01.05.2025 அன்று அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர்

# அ.ரவிச்சந்திரன் தாயார் அ.குப்பாயம்மாள் மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

நாமக்கல் , மே 3 -

நாமக்கல் மேற்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினரும், பள்ளியபாளையம் முன்னாள் நகரக் கழகச் செயலாளரும், கண்டிபுதூர் வள்ளி குரூப்ஸ் கலைக்குழு உறுப்பினருமான அ.ரவிச்சந்திரன் தாயாரும், பள்ளிபாளையம்நகரக் கழகப் பொருளாளர் அ.ராஜா ஆகியோரின் தாயாருமான 30.04.2025 புதன்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் இயற்கை எய்தினார்.



அ.குப்பாயம்மாள்

அன்னாரின் மறைவுக்கு நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் மலரஞ்சலி செலுத்தி, அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி.எஸ்.எஸ். மணி

### மே 2 (1970)



நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து திராவிட இயக்க வளர்ச்சிக்குப் பாடுபட்டு, கழகம் துவங்கிய பின்னர், மதுரை மாவட்டத்தில் கழகம் வலிவுடன் வளர காரணமானவர்களில் இவரும் ஒருவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் உற்ற நண்பராய் திகழ்ந்தவர்.

விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1962 மற்றும் 1967 ஆகிய தேர்தல்களில் ஆத்தூர் தொகுதியில் கழகத்தின் சார்பாக போட்டியிட்டு, சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவர்.

“கழக வளர்ச்சியில் பங்கேற்று நெசவாளர்களின் துயர்துடைப்பிற்கு அரும்பணியாற்றியவர்” என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.